
இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 24 ISSUE 09 SEPTEMBER 2024

ஆண்டு சந்தா 100/- தனிப்பிரதி 10/-



## முந்தினதைப் பார்க்கிலும் பிந்தினது சிறந்தது

இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிக்கை இப்பொழுது **Digital** முறையில் நம்முடைய இணையதளத்திலும்

WWW.JESUSLIVES.IN

# ஆசிரியர் மடல்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். **நீர் எனக்குப் பாராட்டின உமது கிருபை பெரியது சங் 86:13**-என்ற வார்த்தையின்படி ஆண்டவராகிய தேவன் என் தனிப்பட்ட வாழ்க்கையிலும், குடும்ப வாழ்க்கையிலும், ஊழியப் பாதையிலும் பாராட்டின கிருபை கொஞ்சமல்ல பெரிய கிருபை பாராட்டினார். **கடந்த ஜீலை மாதம் 30-ஆம் தேதி என்னுடைய இரண்டாவது மகனுக்கு திருமணம் நேர்த்தியாய், தேவனுக்கு மகிமையாய், எல்லா தேவ ஊழியர்கள் முன்னிலையில் அற்புதமாய் நடந்தது. ஜெபித்த உங்களுக்கும், திருமணத்தில் கலந்து கொண்ட ஒவ்வொருவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைச் சொல்லிக் கொள்ளுகிறேன்.** மட்டுமல்ல கர்த்தருக்குச் சித்தமானால் செப்டம்பர் 5,6,7-ஆகிய தேதிகளில் 72-ஆவது திருப்பத்தூர் பரிசுத்த உபவாச முகாம் நடைபெறுகிறது. இந்த முகாமில் அநேக தேவ ஊழியர்கள் கலந்து கொண்டு ஜெபத்தை நடத்த இருக்கிறார்கள். இந்த முகாமில் நீங்களும் கலந்து கொள்ள உங்களை அன்போடு அழைக்கின்றேன். ஒவ்வொரு மாதமும் செம்பட்டி வானத்தின் வாசலில் நடைபெறும் உபவாச ஜெபமும், மதுரையில் நடைபெறும் எழுப்புதல் உபவாச ஜெபமும் தேவ கிருபையினால் சிறப்பாக நடைபெறுகிறது. தேவன் தமது மகிமையான வார்த்தைகளை உறுதிப்படுத்தி வருகிறார். தொடர்ந்து ஒவ்வொரு கூட்டங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். ராஜ்யத்தின் இந்த சுவிசேஷத்தை அறிவிக்க எங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறோம். தேவன் எங்களை எடுத்துப்பயன்படுத்தவும், இயேசு வாழ்கிறார் ஊழியங்களுக்காகவும், மீடியா ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். உங்கள் ஜெபமும், உங்கள் ஆதரவும் எப்போதும் இந்த ஊழியத்திற்கு இருக்கட்டும். இயேசு கிறிஸ்துவின் மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.

இயேசுவின் பணியில்
சகோ.L.வின்சென்ட்ராஜ்





இயேசுவின்
பாதத்தில்
13
செப்டம்பர்
செம்பட்டியில்
ஆசீர்வாத
உபவாச ஜெபம்
செப்டம்பர் 14
9:30 to
2:30
தேவ செய்தியாளர்கள்
சகோதரர். L. வின்சென்ட்ராஜ்
சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்
இடம் :
வானத்தின் வாசல் எழுப்புதல்
ஜெப மையம் செம்பட்டி,
திண்டுக்கல்
தொடர்புக்கு
9498000449 , 9442800449




Come Join Us
21
செப்டம்பர்
9AM TO 2:30 PM
மதுரையில்
எழுப்புதல்
உபவாச ஜெபம்
தேவ செய்தியாளர்கள்
சகோதரர். எல். வின்சென்ட்ராஜ்
சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்
இடம் : இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரம்
பைபாஸ் ரோடு, பழங்காநத்தம் PRC Depot
அருகில், மதுரை
தொடர்புக்கு :9498000449 , 9442800449



சகோதரர்
L.வின்சென்ட்ராஜ்

# முந்தினதைப் பார்க்கிலும் பிந்தினது சிறந்தது

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

யோவான் 2:10-ல் எந்த மனுஷனும் முன்பு நல்ல திராட்சரசத்தைக் கொடுத்து, ஜனங்கள் திருப்தியடைந்தபின்பு, ருசி குறைந்ததைக் கொடுப்பான், நீரோ நல்ல ரசத்தை இது வரைக்கும் வைத்திருந்தீரே என்றான்.

இந்த சம்பவம் இயேசு கானாவூர் கலியாண வீட்டில் செய்த முதல் அற்புதம். நம் நாட்டில் ஒரு பழமொழி சொல்வார்கள் பந்திக்கு முந்தி வரவேண்டும், படைக்குப் பிந்தி வரவேண்டும் என்று. சிலர் கலியாண வீட்டிற்கு கடைசியாக போனால் சாப்பாடு, கூட்டு, குழம்பு குறைந்து விடும் என்றும் நன்றாக சாப்பிட முடியாது என்றும் வேகமாக முந்தி சாப்பிட்டு விடுவார்கள். சிலர் பிந்தி கடைசியாக வருவார்கள், அவர்களுக்கு ஏதாவது ஒன்று குறைவாக தான் கிடைக்கும். ஆனால் இந்த கலியாண வீட்டிற்கு கடைசியாக வந்தவர்களுக்கு திராட்ச ரசம் இல்லை தீர்ந்துவிட்டது. கடைசி நிலையில், கடைசி ஸ்தானத்தில் இருப்பவர்களை தேவன் கைவிடமாட்டார்.

இவர்கள் யார் என்றால் மணமகனை முதலாவது பார்த்துவிட வேண்டும், அவரை மனதார வாழ்த்தி விட வேண்டும், நான் கலியாணத்திற்கு வந்திருக்கிறேன், நானும் உம்முடைய சந்தோஷத்தில் பங்கு எடுக்கிறேன், எனக்கு சாப்பாடு முக்கியம் இல்லை, இந்த மணமகன், மாப்பிள்ளை தான் முக்கியம் என்று நினைப்பவர்கள். மணவாளனோடு கொஞ்ச நேரம் இருந்து சந்தோஷப்பட்டு களிகூர்ந்து வருவதற்குள் திராட்சரசம் தீர்ந்து போய்விட்டது. ரசம் தீர்ந்து போய்விட்டது என்று போய் விடவில்லை. அந்த கல்யாண வீட்டில் இயேசுவும் இருந்தார், அவர் தண்ணீரை ரசமாக மாற்றினார். இவ்வளவு அருமையான ரசத்தை எங்கே வைத்திருந்தீர்கள் என்று அனைவரும் கேட்கும் அளவுக்கு பிந்தின ரசம் ருசியுள்ளதாக இருந்தது. இயேசு அந்த வற்றிப்போகாத, பெருகுகிற, முன்னேறுகிற ஒரு ஆசீர்வாதத்தை அங்கே வைத்தார். எனக்கு இது முடிந்து விட்டது, அடுத்த வேலை, அடுத்த நாள் என்ன நடக்கும் என்று எனக்கு தெரியவில்லை. ஒவ்வொரு நெருக்கங்களும், பாடுகளும் மனிதனுக்கு வேதனையை, பயத்தை கொண்டு வருகிறது. நமது பக்தியினாலோ, பலத்தினாலோ ஒன்று நடக்காது எல்லாம் அவருடைய கிருபை தான். நமக்கு முன்னால் நிறைய பேர் கிறிஸ்துவுக்காக ஓடினார்கள், உழைத்தார்கள். ஆனால் நமக்குப் பின்னால் உள்ள சந்ததி இயேசுவுக்காக பாரம் எடுப்பார்களா? என்பது சந்தேகம். ஆனால் இப்போ நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த காலத்தில், கடைசி காலத்தில், கடைசி சந்ததிக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த கடைசி சந்ததிக்கு என்று தேவன் ஒரு ஆசீர்வாதத்தை வைத்திருக்கிறார், எழுப்புதலுக்கு என்று பின்மாரி மழையை வைத்திருக்கிறார். இதைப் போலத்தான் கானாவூர் கலியாணத்திற்கு கடைசியில் வந்தவர்களுக்கு, எல்லாவற்றையும் முடித்துவிட்டு வந்தவர்களுக்கு இரட்டிப்பான ஆசீர்வாதமும், ருசியுள்ள திராட்சரசமும் கிடைத்தது. இன்றைக்கு அந்த தேவன் உங்களுக்கு, உங்கள் குடும்பத்திற்கு ஆசீர்வாதத்தை வைத்திருக்கிறார். இது கடைசி மாதம் நான் பணி ஓய்வு பெறப் போகிறேன்,

கடைசி நாட்கள், எனக்கு சரீரத்தில் மிகுந்த பலவீனம் இருக்கிறது, எனக்கு பிள்ளைகள் இல்லை, என்னை ஆதரிக்க ஒருவரும் இல்லை என்று நீங்கள் கலக்கம், பயம் அடையலாம். ஆண்டவர் சொல்லுகிறார் நீ முதலில் வராவிட்டாலும் பரவாயில்லை, கடைசியாவது வந்ததால் அதற்கு கூட உனக்கு ஒரு ஆசீர்வாதத்தை வைத்திருக்கிறேன் என்கிறார்.

## பிந்தினவர்களுக்கு சிறந்தது

மத்தேயு 20:12-14 வரை பிந்தி வந்தவர்களாகிய இவர்கள் ஒரு மணி நேரமாத்திரம் வேலை செய்தார்கள், பகலின் கஷ்டத்தையும் வெயிலின் உஷ்ணத்தையும் சகித்த எங்களுக்கு, இவர்களைச் சமமாக்கினீரே என்று முறுமுறுத்தார்கள். அவர்களில் ஒருவனுக்கு அவன் பிரதியுத்தரமாக, சிநேகிதனே, நான் உனக்கு அநியாயஞ் செய்யவில்லை, நீ என்னிடத்தில் ஒரு பணத்துக்குச் சம்மதிக்கவில்லையா? உன்னுடையதை நீ வாங்கிக்கொண்டு போ, உனக்குக் கொடுத்ததுபோலப் பிந்தி வந்தவனாகிய இவனுக்கும் கொடுப்பது என்னுடைய இஷ்டம்.

பிந்தி வந்தவர்களாகிய இவர்கள் ஒரு மணி நேரம்தான் வேலை செய்தார்கள் நாங்கள் முன்னாடி வந்தவர்கள் நிறைய கஷ்டப்பட்டோம், உழைத்தோம் என்றார்கள். இன்றைக்கு அநேகர் நகையை வீட்டை விற்று பெற்ற பிள்ளைகளைப் படிக்க வைக்கிறார்கள். வெளிநாட்டிற்கு அனுப்புகிறார்கள். வாழ்க்கையில் நிறைய கஷ்டங்களை தாங்கள் அனுபவிக்கிறார்கள், பிள்ளைகள் எந்த கஷ்டமும் படக்கூடாது என்று. இப்படி கஷ்டப்பட்டு வளர்த்த பிள்ளைகள் பின்நாட்களில் எப்படி இருக்கிறீர்கள், என்ன செய்கிறீர்கள் என்று கூட கேட்பது இல்லை. எவ்வளவு வேதனையான காலகட்டத்தில் நாம் வாழ்கிறோம். முதலில் வந்தவர்கள் கடைசியில் வந்தவர்களை விளங்கிக் கொள்ளவில்லை, புரிந்து கொள்ளவில்லை. பகலின் கஷ்டத்தையும், வெயிலின் உஷ்ணத்தையும் அனுபவிக்காத இவர்களை எங்களுக்குச் சமமாக்கினீரே என்று முறுமுறுத்தார்கள்.எந்த கஷ்டத்தையும் அனுபவிக்காத இவர்களுக்கு, எங்களுக்கு என்ன ஆசீர்வாதமோ, எங்களுக்கு என்ன உயர்வோ அதையே இவர்களுக்கும் கொடுக்கிறீரே இது நியாயமா என்று ஆண்டவரிடம் கேட்டார்கள். ஆண்டவர் நான் தயாளன், நான் இரக்கமுள்ளவர், உனக்கு இரங்கினது போல உன் உடன் ஊழியனுக்கு நான் இரங்க வேண்டாமா என்றார். ஆண்டவர் கடைசியில் வந்த அவர்களுக்கும் இரங்கினார்.

கடைசி மணி நேரத்தில் ஆண்டவருக்காக செயல்படுகிற ஒரு கூட்ட மக்களுக்குத் தான் இதுவரை இல்லாத வல்லமையை அனுப்பப் போகிறார். இதுவரை இல்லாத கிருபையை, மேன்மையை தேவன் அனுப்பி நீங்கள் மனதார கர்த்தரை நேசித்து, அவரை பின்பற்ற உங்களை ஆசீர்வதிக்கப் போகிறார். இதுவரை குறைந்த ரசம் எல்லாம், பத்தாமல் போன ஆசீர்வாதம் எல்லாம் நிரம்பி வழிகிற ரசமாக, ஆசீர்வாதமாக மாற்றப் போகிறார். இதை இதுவரை எங்கே வைத்திருந்தீர்கள் என்று மற்றவர்கள் கேட்கும் அளவுக்கு தேவன் உங்களை ஆசீர்வதிக்கப் போகிறார்.

## கீழ்ப்படிதல் சிறந்தது

கீழ்ப்படிதல் சிறந்தது பேதுருவின் படவில் நின்று இயேசு பிரசங்கம் பண்ணி முடித்த பின்பு வலது பக்கமாக வலையை போட சொன்னார். பகலில் வலையை போட மீனவர்களுக்கு நன்றாக தெரியும். மீனின் கண்கள் மிகவும் கூர்மையானது. வலையைப் போடும்போதே தப்பி ஓடிவிடும். ஆனால் பேதுரு, இயேசு சொன்ன வார்த்தைக்கு கீழ்ப்படிந்து வலையைப் போட்டபோது ஏராளமான மீன்களைப் பிடித்தான். கடைசியாக ஒன்றும் கிடைக்க வில்லை என்று சொல்லி வலையை அலசின போது தான் பேதுருவுக்கு ஆச்சரியமான அற்புதத்தை செய்தார். அவன் வலைகள் கிழியத்தக்க

மீன்களை பிடித்தான். என் காலம் முடிகிறது, நேரம் முடிகிறது, எனக்கு கொடுக்கப்பட்ட சந்தர்ப்பம் எல்லாம் முடிகிறது இனி நான் வீட்டுக்குத்தான் போக வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்த அந்த கடைசி மணி நேரத்தில் இயேசு அவன் வீட்டிற்கு வந்தார், அவன் உள்ளத்திற்குள் வந்தார், ஒரு வார்த்தை சொன்னார் ஆழத்தில் தள்ளிக் கொண்டு போய் வலையைப் போடு என்றார். இயேசுவின் வார்த்தைக்குகு கீழ்ப்படிந்து வலையைப் போட்டவுடனே ஏராளமான மீன்கள் கிடைத்தது. உடனே மற்ற படகில் உள்ளவர்களுக்கு சைகை காட்டி உதவி செய்யுமாறு அழைத்தான். அன்றைக்கே தீர்மானம் எடுத்தான், இனி எனக்கு இந்த மீன் பிடிக்கிற வேலையே வேண்டாம், நான் என் வாழ்க்கையை இயேசுவுக்கு அர்ப்பணிக்கிறேன் என்று சொல்லி மனிதர்களைப் பிடிக்கிறவனாக மாறி விட்டான்.

உங்களுக்கு இருக்கிற வியாதி, பலவீனம், தோல்வியான நிலையில் இயேசு கிறிஸ்து அற்புதம் செய்து உங்களை விடுதலை ஆக்கிவிடுவார்.விடுதலையானவுடன் இந்த கடைசி வாழ்க்கை யாருக்கென்று தெரியுமா? என்று உங்கள் மனசு சொல்லும் போது நீங்கள் இனி இயேசுவுக்காக நான் வாழ்ந்திடுவேன் என்று உங்களை அர்ப்பணியுங்கள். இவ்வளவு நேரம் இந்த ருசியுள்ள ரசத்தை எங்கே வைத்திருந்தீர்கள் என்று அந்த மணவாளனைப் பார்த்து கேட்டார்கள். அதே போலத்தான் இந்த கடைசி நேரத்தில், கடைசி மணித்துளிகளில் வாழ்கிற உங்கள் வாழ்க்கையை, உங்கள் குடும்பத்தை நல்ல ரசமாக, ருசியுள்ள ரசமாக, ஆசீர்வாதமுள்ளவர்களாக மாற்றப் போகிறார்.

## பிந்தின நற்குணம் சிறந்தது

ரூத் 3:10-ல் அதற்கு அவன், மகளே, நீ கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாயாக, நீ தரித்திரரும் ஐசுவரியவான்களுமான வாலிபர்களின் பிறகே போகாததினால், உன் முந்தின நற்குணத்தைப் பார்க்கிலும் உன் பிந்தின நற்குணம் உத்தமமாயிருக்கிறது.

இதுவரை உங்கள் வீட்டில் நீங்கள் நல்ல பெயர் வாங்கவில்லை, உங்கள் கணவர் உங்களைப் பாராட்டவில்லை, எதுக்கு வம்பு என்று உங்களைப் பார்த்தாலே விலகிப் போகிறார் என்றால் இனி இருக்கிற பிந்தின நற்குணம், இனி இருக்கிற பிந்தின வாழ்க்கையில் ஒரு மாற்றத்தைக் கொடுத்து, முன்னேற்றத்தைக் கொடுத்து உங்களை ஆசீர்வதிக்க போகிறார். உங்கள் கணவர் கேட்பார் இதுவரை இந்த நல்ல குணத்தை எங்கே வைத்திருந்தாய், இதுவரை இந்த சுபாவம் எங்கே இருந்தது என்று. அன்பு, ஜெபம், இரக்கம், மன்றாட்டு ஆவி உனக்குள் எங்கே ஒழித்து வைத்திருந்தாய் என்று. உன்னுடைய முந்தின நற்குணத்தைக் காட்டிலும், உன் பிந்தின நற்குணம் மேலானதாய் இருக்கப் போகிறது என்று ஆண்டவர் சொல்லுகிறார். இதுவரை எலியும் பூனையுமாக வாழ்ந்த உங்களை இனி சமாதானமாக கர்த்தர் இணைத்து நடத்தப் போகிறார். உங்களை ஒடுக்குகிறவன் இல்லாமலே போகப் போகிறான், கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து நடத்துவார். கானாவூர் கலியாணத்திற்கு பிந்தி வந்த, கடைசியாக வந்த அத்தனை பேருக்கும் ருசியுள்ள, மேன்மையுள்ள ஆசீர்வாதங்களை தேவன் கொடுத்தார். அந்த ஆண்டவர் இன்றைக்கு உங்களை இந்த கடைசி மணி நேரத்திலேயும் ஒரு ருசியுள்ள,ஆசீர்வாதமுள்ள பாத்திரமாக மாற்றப் போகிறார்

இதுவரை என் பெயர் கெட்டுப் போயிற்று. வாங்கின இடத்தில் சொன்னபடி நான் நடந்து கொள்ள முடியவில்லை, கடன்காரர்களுக்கு கடனை திருப்பிக் கொடுக்க முடியவில்லை. பொருளாதாரத்தில் மிகவும் நொடிந்து போன நிலையில் இருக்கிறேன் என்கிறீர்களா?. இன்றைக்கு உங்கள் சிறையிருப்பை தேவன் மாற்றப் போகிறார், உங்களுக்கு ஒரு வழியை திறப்பார். கற்சாடி வெறுமையாக இருந்தாலும், ரசம் தீர்ந்து போனாலும், தண்ணீரை ரசமாக மாற்றுகிற தேவன் இன்றைக்கும் உயிரோடு இருக்கிறார்.

இந்த ரூத்தைப் பற்றி எல்லாருக்கும் நன்றாக தெரியும். கணவன் மரித்துப் போய் விட்டான். மூத்த மருமகள் ஓர்பாள் தன் சொந்த ஜனத்தாரிடத்திற்கு போய்விட்டாள்.

ஆனால் ரூத் மட்டும் தன் மாமியாரை கைவிடாமல், விட்டு விலகாமல் அவள் எங்கு போனாலும் பின்பற்றி வந்தாள்.உன்னுடைய தேவன் என் தேவன் என்று சொன்னாள். நகோமியை ஒரு தாயைப் போல நேசித்து அவளைப் பின்பற்றி வருகிறாள். நகோமி தன் மருமகளுக்கு சில ஆலோசனைகளைச் சொல்லி போவாஸ் என்பவரின் நிலத்தில் போய் அவர் பாதத்தில் விழச் செய்தாள். அப்பொழுது போவாஸ் நீ என்னை சார்ந்து கொண்டபடியால் உனக்கு நான் நன்மை செய்வேன் என்றார். அப்பொழுது போவாஸ் ரூத்தை பார்த்து சொல்லிய வார்த்தை தான் இது. உன் முந்தின நற்குணத்தைப் பார்க்கிலும் உன் பிந்தின நற்குணம் உத்தமமாயிருக்கிறது என்றான். இந்த போவாஸ் இயேசுவுக்கு நிழலாட்டமாய் இருக்கிறார். தேவன் உங்கள் குடும்பத்தில் ஒரு அற்புதம் செய்யப் போகிறார். உங்கள் சிறையிருப்பை மாற்றி கண்ணீரைத் துடைக்கபோகிறார்.

## பின்சந்ததி சிறந்தது

இதுவரை அடங்காமல் உங்கள் பெயரை கெடுத்து, முள்ளாக இருந்த உங்கள் பிள்ளைகளை இனி தேவன் ஒலிவமரக் கன்றுகளாய் மாற்றுவார். ஜெபத்தை அற்பமாய் நினைத்து, நீ வேண்டுமானால் ஜெபம்பண்ணு என்று சொல்லி, உங்களை கேவலமாக நினைத்த உங்கள் பிள்ளைகளை தேவன் மாற்றுவார் தெற்கத்திய வெள்ளங்களைத் திருப்புவது போல உங்கள் பிள்ளைகளின் வாழ்க்கையை தேவன் திருப்பி விடுவார். எல்லா முரட்டாட்டங்களையும் மாற்றிவிட்டு இவனா! இந்த பையனா! இந்தப் பிள்ளையா! என்று எல்லாரும் ஆச்சரியப்படும் அளவுக்கு ஒரு மாற்றத்தை பிள்ளைகள் வாழ்வில் தேவன் செய்யப் போகிறார். மதுரை பட்டணத்தில் நாங்கள் நடத்துகிற எழுப்புதல் உபவாச ஜெபத்திற்கு காலையில் சீக்கிரமாக நான் வந்து விட்டேன் அப்பொழுது ஒரு தம்பி தன் தாயுடன் வந்திருந்தார்.சீக்கிரமே வந்து ஆவியில் நிறைந்து ஜெபித்தார். பிறகு சேர்களை ஒழுங்குப்படுத்தி வரிசையாக போட்டார். இதை பார்க்கும் போது ரொம்ப சந்தோஷமாக இருந்தது இந்த காலத்திலும் ஆவியில் நிரம்பி ஜெபிக்கிற பிள்ளையா! என்று சந்தோஷப்பட்டேன். இப்படி உங்கள் பிள்ளைகளையும் தேவன் மாற்றுவார்.

இந்த கடைசி மணித்துளிக்காக, ஆசீர்வாதத்திற்காக காத்திருக்கிற பிள்ளைகளுக்கு ஒரு ருசியுள்ள ரசத்தை, ஒரு மேன்மையான ரசத்தை, ஒரு ஆசீர்வாதமுள்ள ரசத்தை, வாழ்க்கையை ஆண்டவர் பிள்ளைகளுக்குத் தந்து அவர்களை வழிநடத்துவார். எங்கேயோ மாயை தேடி ஓடிக் கொண்டிருக்கிறவர்களை தெற்கத்திய வெள்ளங்களைத் திருப்புவது போல அவர்களை தேவன் திருப்ப போகிறார். அவர்கள் ஜெபத்திற்கு தூரமாக விலகி இருந்தாலும், பாளையத்திற்குப் புறம்பே இருந்த இரண்டு வாலிபர்கள் மேல் பரிசுத்த ஆவியானவர் இறங்கினது போல, யார் யார் இந்த தேவ பிரசன்னத்தை விட்டு விலகி இருக்கிறார்களோ அத்தனை பேர் மேலும் தேவ மகிமை, வல்லமை இந்த கடைசி நாட்களில் இறங்கப் போகிறது. அவர்களும் ஆசீர்வதிக்கப்பட போகிறார்கள்.

கடைசியாக வந்த, கடைசி மணி நேரத்தில் வந்த, ரசம் குறைந்துபோன நிலையில் இருந்த அவர்களுக்கு ஆசீர்வாதத்தை, ரசத்தை வைத்திருந்த தேவன், இன்றைக்கு உங்களுக்கும் வைத்திருக்கிறார். உங்கள் வேதனை, புலம்பல், வேண்டுதல், அங்கலாய்ப்பு எல்லாவற்றையும் மாற்றுவார். ஜெபத்தில் குறைவு பட்டு விட்டேன், வேதம் வாசிக்கிறதில், உம்மை தேடுவதில் குறைந்து விட்டேன். ஊழியம் செய்வதில் குறைந்து விட்டேன். என் பிரச்சனையை நினைத்து நினைத்து நீங்க கொடுத்த தரிசனத்தை இழந்து விட்டேன். ரசம் இல்லாமல் வெறுமையான கற்சாடியாக இருக்கிறேன் என்கிற உங்களை தமது மகிமையால், பிரசன்னத்தினால், நிரம்பி வழிகிற ஆசீர்வாதத்தினால் நிரப்பி வழிநடத்துவாராக!



பெண்கள் பகுதி

சகோதரி.
கலா வின்சென்ட்ராஜ்

# கலங்காதே! உன் சூழ்நிலை மாறும்

**ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் சகோதரிகளுக்கு வாழ்த்துக்கள்.**

பலவிதமான போராட்டங்களில் நாம் கடந்து செல்லும் போது ஐயோ! இந்தப் போராட்டமான நிலை மாறாதா, எப்போது மாறும். கடன் பிரச்சனைகள் தாக்கும்போது வட்டி கட்டி கட்டியே எங்கள் உழைப்பின் பலனெல்லாம் போய்விட்டது. எனக்கு பிரச்சனையே தீரவில்லையே என்று இந்தப் பிரச்சனை மாறும். என் வாழ்க்கை முழுவதும் இப்படித்தான் பிரச்சனையில் நான் காலத்தை கழிக்க வேண்டுமா? வரக் கூடாத வியாதி என் சரீரத்தில் வந்துவிட்டதே மருத்துவர் உயிருள்ளவரை மாத்திரை எடுக்க வேண்டும் என்று சொல்லி விட்டார் என்ன செய்வேன்? எப்படி செலவு செய்வேன். இந்த நிலை மாறாதா ஏங்கிக்கொண்டிருக்கிறீர்களா? உங்களது இந்த சூழ்நிலை கட்டாயம் மாறும் என்று ஆண்டவர் சொல்லுகிறார்.

சமாரியா தேசத்திலே கொடிய பஞ்சமுண்டானபோது இஸ்ரவேல் ராஜா மிகுந்த வேதனையோடு உலாவிக் கொண்டு இருக்கிறார். அப்போது பஞ்சத்தின் உச்சநிலை, எவ்வளவு கொடிதானதென்றால் ஒரு பெண் தன் பிள்ளையை சமைத்து தன் பசியை ஆற்ற சாப்பிடும் நிலை வந்துவிட்டது. இதைக் கேட்ட ராஜா மிகவும் தளர்ந்துபோய் நான் இனி கர்த்தருக்காக காத்திருக்க வேண்டியதென்ன என்கிறான். ஆனால் அடுத்த நாளே சமாரியாவின் நிலை தலைகீழாய் மாறினது. நம் நாட்டில் ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு நாளை விற்கப்படும் என்றால் நம்மால் நம்ப முடியுமா? ஆனால் முடியாத அந்தக் காரியத்தை இஸ்ரவேல் ஜனங்களுக்காக தேவன் செய்து, அவர்களது அந்த சூழ்நிலையை தலைகீழாய் மாறும்படி அற்புதம் செய்தார். அதே தேவன் இன்றைக்கு நீங்கள் கடந்து வருகிற இந்த சூழ்நிலையையும் மாற்றப் போகிறார். எப்பொழுது என் கண்ணீர் மாறும், என் துயரம் என்று தீரும். நானும் என் குடும்பமும் இந்த உலகத்தில் அமைதியாய் வாழ முடியுமா? என்றெல்லாம் கலங்கி கண்ணீர் வடிக்கும் உங்களைப் பார்த்துத்தான் ஆண்டவர் சொல்கிறார். கலங்காதே! உன் சூழ்நிலை மாறும். இந்த துன்பம் உன்னைவிட்டு நீங்கிப்போகும் என்கிறார், இயேசு உங்களை நேசிக்கிறார். நாம் இந்த துன்பத்திலேயே நாட்களை கடத்திவிட வேண்டும் என்று அவர் விரும்பவில்லை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நமக்காக இந்தத் துக்கங்களை எல்லாம் சிலுவையில் சுமந்து தீர்த்துவிட்டார்.

**ஏசா 53:4 மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார் நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்.**

அவர்தான் கலங்காதே உன் சூழ்நிலையை நான் மாற்றுவேன். உன்னை நான் வாழ வைப்பேன். நீ என்னிடத்தில் உன் பாரங்களை, வேதனைகளை வைத்துவிடு நான் பார்த்துக் கொள்வேன் என்று ஆண்டவர் சொல்கிறார். நம் வாழ்க்கையின் எப்படிப்பட்ட சூழ்நிலைகள், எப்படியெல்லாம் மாறும் என்று பார்ப்போம்.

## கசப்பான சூழ்நிலை மாறும்

**யாத் 15:25 மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்; அப்பொழுது கர்த்தர் மோசேக்கு ஒரு மரத்தைக் காண்பித்தார்; அதை அவன் தண்ணீரில் போட்டவுடனே, அது மதுரமான தண்ணீராயிற்று.**

இஸ்ரவேல் ஜனங்கள் சூர் வனாந்திரம் புறப்பட்டுப் போனார்கள். அங்கே தண்ணீர் இல்லை. மூன்று நாளாய் தண்ணீர் இல்லாமல் நடந்து வந்த அவர்கள் மாரா என்ற இடத்திற்கு வந்தார்கள். அங்கே தண்ணீர் இருந்தது. ஆனால் அது கசப்பாயிருந்தது. அந்த நேரத்தில் ஆண்டவ-ரால் அற்புதம் செய்ய முடியும் என்று நம்பமுடியாமல் ஜனங்கள் முறுமுறுத்தார்கள். தண்ணீர் இல்லாமல் நாங்கள் என்ன செய்வோம். என்னத்தைக் குடிப்போம் என்றார்கள்.அவர்கள் கூக்குரலை ஆண்டவர் கேட்டார். மோசேக்கு ஒரு மரத்தைக் காண்பித்தார். அதை அவன் தண்ணீரில் போட்டவுடனே அது மதுரமாயிற்று.



அந்த மரம் சிலுவை மரம். உங்கள் வாழ்க்கை எவ்வளவு கசப்பாயிருந்தாலும், அது மதுரமாய் மாறுவதற்கு வழி இருக்கிறது. அது கல்வாரிச் சிலுவையில் தன் உயிரை தியாகமாய் கொடுத்த, தன் இரத்தத்தை சிந்தின இயேசுவை உங்கள் உள்ளத்தில், உங்கள் வாழ்க்கையில் கூப்பிடுவதுதான். வாழ்க்கை முழுவதும் கசப்பை பருகிவிட்டேன். அது மதுரமாய் மாறுமா என்று கல-ங்குகிறீர்களா? கானாவூர் திருமணத்தில் வெறும் தண்ணீரை திராட்சை ரசமாக மாற்றினவர். கசந்து போயிருக்கும் உங்கள் வாழ்வை மதுரமாய் மாற்றுவார்.

நகோமி என்ற பெண்ணின் வாழ்வில் கசப்பு வந்தது. **ரூத் 1:20-ல் அதற்கு அவள், நீங்கள் என்னை நகோமி என்று சொல்ல-ாமல், மாராள் என்று சொல்லுங்கள், சர்வவல்லவர் எனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டார்.** அவள் வாழ்வில் அத்தனை கசப்பும், இழப்பும், விரக்தியும், தனிமையும் வரக் காரணம் தன் தேவனை விட்டு அந்நிய மோவாப் தேசத்திற்கு போய் விட்டாள். ஆனால் அவள் தன் தவறை உணர்ந்து தன் தேவனிடம் திரும்பும்போது அவள் வாழ்க்கை மதுரமாயிற்று.

எசேக்கியா ராஜா சரீரத்தின் வியாதியால் மிகுந்த கசப்போடு கடந்து சென்றார். ஆனால் கண்ணீரோடு ஆண்டவரிடம் வேண்டிக் கொண்ட போது ஆண்டவர் அவரை குணமாக்கினார். **ஏசா 38:15-ல் நான் என்ன சொல்லுவேன்? அவர் எனக்கு வாக்கு அருளினார்; அந்தப்பிரகாரமே செய்தார்; என் ஆயுசின் வருஷங்களிலெல்லாம் என் ஆத்துமாவின் கசப்பை நினைத்து நடந்துகொள்வேன்.** உங்கள் வாழ்வில் குறைவுகளால் வருகிற கசப்புகளா? நகோமியைப் போல் தனிமையில் மற்றவர்களின் அன்பு கிடைக்காமல் புறக்கணிக்கப்படுகிறதினால், இழப்புகளினால் வருகிற கசப்புகளா? வியாதியினால் உண்டான கசப்புகளா? எதுவானாலும் இன்று மதுரமாய் மாறும்.

## தீமை நன்மையாக மாறும்.

**நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள், தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார். (ஆதி 50:20)**

யோசேப்பு தன் சொந்த சகோதரர்களால் பகைப்பட்டு, அந்நியரிடம் விற்கப்பட்டான், அந்த இடத்திலும் பொய் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் கிடந்தான். யாருக்கும் எந்த தீமையும் செய்யாதவன். தீமையை விட்டு விலகி நன்மை செய்த மனிதன். தாயின் அன்பை இழந்து அவன் வாழ்வில் பட்ட கஷ்டங்களுக்கு அளவே இல்லை. அவனுக்கு நேர்ந்த தீமைகள் தான் அதிகம். அதன் நடுவில் அவன் பொறுமையாய் இருந்தான். அவன் சகோதரர்கள் அவன் இறந்து விட்டான் என்று தகப்பனையும் நம்ப வைத்து, அவர்களும் அவனை மறந்தே போய்விட்டார்கள். ஆனால் சர்வ வல்லவரோ அப்படி இருக்கவில்லை. எல்லாராலும் கைவிடப்பட்டு, மறக்கப்பட்டு வாழ்ந்த அந்த மனிதனுக்கு தம் வல்லமையைஅனுப்பினார். அத்தேசத்தின் ராஜாவின் கனவுக்கு அர்த்தம் சொன்னான். நினைத்துப் பார்த்திராத அளவு உயர்த்தப்பட்டான்.

உங்களுக்கும் விரோதமாய் அநேகர் எழும்பி விட்டார்களா? என் கையில் நன்மை பெற்றவர்கள் என்னைப் பகைக்கிறார்கள் என்று புலம்புகிறீர்களா? காரணமற்ற காயம், வேதனை. பொய்யான வார்த்தையை சொல்லி புண்படுத்துகிறார்களா? எங்கும் எதிலும் தீமையா உங்களுக்கு வருகிறது. இந்த தீமைகள் அனைத்தும் உங்களுக்கு நன்மையாக தேவன் மாற்றுவார். நீங்களும் நினைத்துப் பாராத அளவு உங்களை உயர்த்தப்போகிறார். மனம் கலங்காதிருங்கள் உங்கள் வாழ்க்கையில் வந்த, நேரிட்ட தீமைகளை தேவன் நன்மையாக மாற்றுவார்.

## துக்கம் சந்தோஷமாக மாறும்

**அவன் துக்கம் மகாகொடிய துக்கம் என்று கண்டு, ஒருவரும் அவனோடு ஒரு வார்த்தையையும் பேசாமல், இரவுபகல் ஏழுநாள், அவனோடுகூடத் தரையிலே உட்கார்ந்திருந்தார்கள். (யோபு 2:13)**

யோபு தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்கு விலகுகிற மனிதன். ஆனால் அவன் வாழ்வில் பாடுகள், இழப்புகள், வியாதி, புறக்கணிப்பு எல்லாம் சேர்ந்து கொண்டது. மனிதர்களால் ஆறுதல் சொல்ல முடியாத துக்கம் அவர் வாழ்க்கையில் இருந்தது.என்ன ஆறுதல் சொல்வதென்றே நண்பர்கள் கூட திகைத்தார்கள். அத்தனை வேதனையின் நடுவிலும் அவன் தேவன் மேல் வைத்த நம்பிக்கை, விசுவாசம் அழியவில்லை, குறையவில்லை. நம் வீட்டில் ஒரு நாய் இறந்து போனால் கூட நம் உள்ளம் கலங்கி விடுகிறது. ஆனால் யோபு எத்தனை துக்கம் நிறைந்த மனிதனாக இருந்த போதும் அதன் நடுவிலும் என் மீட்பர் உயிரோடு இருக்கிறார் என்றான். அசைக்க முடியாத நம்பிக்கை அவனுக்குள் இருந்தது. இழந்த அத்தனை நன்மையையும் இரண்டு மடங்கு பெற்றுக் கொண்டான். அவன் துக்கம் சந்தோஷமாய் மாறினது.

அன்னாள் துக்கம் நிறைந்தவளாக காணப்பட்டாள். குழந்தையில்லாமல் அவள் அடைந்த அவமானம் அதிகம். தினமும் மற்றவர்களால் வேதனைப்படுத்தப்பட்டு, கண்ணீரோடும், துக்கத்தோடும் வாழ்ந்தாள். ஒரு நாள் தேவ சமூகத்தில் தன் துக்கத்தை எல்லாம் ஊற்றினாள். அவள் துக்கம் சந்தோஷமாக மாறியது. தேவன் அவளுக்கு சாமுவேலை கொடுத்து அவளுடைய வாழ்க்கையில் சந்தோஷத்தை கட்டளையிட்டார். உங்கள் துக்கமும் சந்தோஷமாய் மாறும். (யோவான் 16:20)

## தோல்வி ஜெயமாக மாறும்

**யோசு 7:12,13-ல் ஆதலால் இஸ்ரவேல்**

**புத்திரர் தங்கள் சத்துருக்களுக்கு முன்பாக நிற்கக் கூடாமல், தங்கள் சத்துருக்களுக்கு முதுகைக் காட்டினார்கள், அவர்கள் சாபத்தீடானார்கள், நீங்கள் சாபத்தீடானதை உங்கள் நடுவிலிருந்து நிக்கிரகம் பண்ணாவிட்டால், இனி உங்களோடே இரேன். எழுந்திரு, நீ ஜனங்களைப் பரிசுத்தம்பண்ணிச் சொல்ல வேண்டியது என்னவென்றால், நாளையதினத்துக்கு உங்களைப் பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள், இஸ்ரவேலரே, சாபத்தீடானது உங்கள் நடுவே இருக்கிறது, நீங்கள் சாபத்தீடானதை உங்கள் நடுவிலிருந்து விலக்காதிருக்குமட்டும், நீங்கள் உங்கள் சத்துருக்களுக்கு முன்பாக நிற்கக்கூடாது என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்**

இஸ்ரவேல் மக்கள் ஆயி என்ற பட்டணத்திற்கு எதிராக யுத்தம் செய்ய வரும்போது அவர்கள் எரிக்கோவிலிருந்து சிலப் பொருட்களை திருடி மறைத்தார்கள். தேவன் விரும்பாத, வெறுக்கிற சாபத்தீடான வற்றை திருடி எடுத்து தங்களுக்குள் மறைத்து வைத்துக் கொண்டார்கள். அதினிமித்தம் ஆண்டவரின் கோபம் அவர்கள் மேல் வந்தது. ஆயி பட்டணத்திற்கு எதிரான யுத்தத்தில் சத்துருக்களுக்கு முன்பாக நிற்க முடியாமல் முறிந்தோடினார்கள்.

அப்பொழுது யோசுவா ஆண்டவரின் பாதத்தில் விழுந்து கிடந்தபோது தான் இந்த வார்த்தையை சொல்கிறார். நீ ஜனங்களை பரிசுத்தப்படுத்து, சாபத்தீடானதை உங்கள் நடுவிலிருந்து விலக்கவில்லையானால் நீங்கள் நிமிர்ந்து நிற்க முடியாது. நான் உங்களோடு இருக்க முடியாது. அற்புதம் நீங்கள் பெற முடியாது என்றார். உடனே இஸ்ரவேலர் தங்களைப் பரிசுத்தப் படுத்திக் கொண்டு ஆயி பட்டணத்திற்கு எதிராக யுத்தத்தை தொடர்ந்தார்கள். அவர்கள் தோல்வி ஜெயமாக மாறியது தோல்வி மேல் தோல்வியால் துவண்டு போய் விட்டீர்களா?



இனிமேல் வெற்றியே இல்லை, நான் ஏன் வாழ வேண்டும் என்று எண்ணி விட்டீர்கள் அல்லவா? உங்களை ஒருபோதும் தள்ளாத நேசர் என்னிடத்தில் வா, நான் உன் தோல்வியை ஜெயமாக மாற்றுவேன் என்கிறார். ஆண்டவரே, உமக்குப் பிரியமில்லாத அசுத்தமான எண்ணங்கள், பார்வைகள், பேச்சுக்கள், செயல்கள் எனக்கு வேண்டாம். பாவம் வேண்டாம். என்னை ஆசீர்வதித்து எனக்கு ஜெயம் தாரும் என்று கேட்டால் உங்கள் தோல்வி ஜெயமாக மாறும். உங்கள் சூழ்நிலை அற்புதமாய் மாறும். என் ஆண்டவராகிய தேவன் தாமே உங்கள் வாழ்க்கையில் உள்ள கசப்பான, தீமையான, துக்கமான, தோல்வியான எல்லாச் சூழ்நிலைகளையும் மாற்றி உங்களை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக.


24 மணி நேர

**ஜெப உதவிக்கு**

**94428 00447**
**94980 00449**

**TOLL FREE NUMBER**

**1800 309 9333**

## செம்பட்டியில் ஜீலை 13 ஆம் தேதியன்று நடைபெற்ற சிறப்பு

# ஆசீர்வாத உபவாச ஜெபம்




கடந்த ஜீலை 13-ஆம் தேதி ((2024) நமது வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெபமையத்தில் வைத்து நடைபெற்ற ஆசீர்வாத உபவாச ஜெபத்தில் திரளான மக்கள் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுச் செல்ல தேவன் கிருபை செய்தார். நம்முடைய ஆவிக்குரிய, உலகப்பிரகாசமான வாழ்க்கையில் வெற்றி பெறவே தேவன் விரும்புகிறார் என்றும், நம் குடும்பத்தாருக்கு நாம் காவலாளி, உத்திரவாதி என்பதை குறித்தும், நம்மை குறித்த தேவதிட்டத்தை குறித்தும் சகோதரர். ஜான்சாம் ஜாய்சன் அவர்கள் மூலம் தேவன் பேசி மக்களை ஆவி, ஆத்துமா, சரீரத்தில் உயிர்ப்பித்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.










# நீங்கள் கனி கொடுப்பீர்கள்

சகோ. பிரேமா டேவிட்

உனக்கு அடையாளமாயிருப்பது என்னவென்றால் இந்த வருஷத்திலே தப்பிப் பயிராகிறதையும், இரண்டாம் வருஷத்திலே தானாய் விளைகிறதையும் சாப்பிடுவீர்கள். மூன்றாம் வருஷத்திலோ விதைத்து அறுத்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனிகளைப் புசிப்பீர்கள். யூதா வம்சத்தாரில் தப்பி மிந்திருக்கிறவர்கள் மாறுபடியும் கீழே வேர் பற்றி மேலே கனி கொடுப்பார்கள். ஏசா 37:30,31.

கிறிஸ்துவில் அன்பான வாலிபதம்பி, தங்கைகளே, நானே மெய்யான திராட்சச்செடி என்றவரும், நாம் கனி கொடுக்க வேண்டு மென்பதற்காக கொடிகளாகிய நம்மை தம்மோடு இணைத்துக் கொண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

படிப்பு வரமாட்டேங்குது இதுவரை கிரேஸ் மார்க்குல தான் பாஸாகிக்கிட்டு வர்றேள். **Public exam, Competitive exam**-ல எல்லாம் எப்படி **Pass** ஆவேன், எத்தனை முறை படிச்சு, எவ்வளவு **effort** எல்லாம் **waste**, எத்தனை நாளைக்கு அம்மா, அப்பாவுடைய உழைப்பில சாப்பிடுறது, மற்றவருடைய உதவியையே எவ்வளவு நாளைக்கு எதிப்பார்த்திருக்கிறது?. ஒரு நேரம் அதை அவர்கள் அறிவுரையாக, கோபமாக சொல்லும் போது என்னால் அதைத் தாங்கிக்கொள்ள முடியடில்லையே. **Prayer Life**-ல யும் எழும்ப முடியல, எதையெடுத்தாலும் பலனை பார்க்கவே முடியல, என்னறக்கு, எப்போது எனக்கு உயர்வு வரும் என்று காத்துக் கொண்டிருக்கிறீர்களா?. இதுவரை யாராவது கொடுக்க மாட்டார்களா?, உதவமாட்டார்களா? என்றிருந்த நீங்கள் இனி தேவனுடைய தயவினாலும், உதவியினாலும் படித்து, உழைத்து பிரயாசப்பட்டு உயர்வடையப் போகிறீர்கள். கனி கொடுக்கப் போகிறார்கள். கனிகளைப் புசித்த நீங்கள், கனி கொடுக்கப்போகிறீர்கள். பலன்களை, பதில்களைப் பெற்றுக்கொள்ளப் போகிறீர்கள். கனி கொடுக்க நாம், நீங்கள் என்ன செய்ய வேண்டும்.

## கீழே வேர் பற்ற வேண்டும்
[கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும்.]

நீதிமானுடைய வேர் கனி கொடுக்கும். நீதி 12:12 நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. யோவான் 15:5

ஒரு செடியோ, மரமோ கனிகொடுக்க சூரியஒளி, தண்ணீர், மாத்திரமல்ல அதின் வேர் நிலத்தில் நன்றாக ஊன்றியிருக்க வேண்டியது மிக அவசியம். அதுபோல நம்மையெல்லாம் படைத்த, நமக்காக சிலுவையில் மரித்து உயிர்த்தெழுந்த இயேசுவாலேயன்றி வேறு ஒருவராலும் நிரந்தரமான விடுதலையும், ஆசீர்வாதமும் நமக்கு கிடைக்கப் போவதில்லை என்பதால் நம்முடைய இருதயம் இயேசுவை நம்பி, அந்த நம்பிக்கையில் உறுதியாயிருப் பதைத்தான் வேர் பற்றுதல் நிலைத்திருத்தல் என்கிறோம்.

வேலை மற்றும் எதைச் செய்யும் முன்னும் ஆண்டவரே உங்களை நம்பி இதைச் செய்கிறேன், என்னை, என் திறமையை, பெருமையை நம்பவில்லை? நீங்க தான் எனக்கு உதவி செய்யனும். உமக்காக இந்கு வேலைகளைச் செய்கிறேன் என்று செய்து பாருங்கள் நிச்சயம் அது வெற்றியாக முடியும். ஒரு ஜெபம் பண்ணுவது முதற்கொண்டு அவருடைய உதவியில்லாமல் செய்ய முடியாது, செய்யவும் கூடாது. கொடியானது தானாக கனி கொடுக்க முடியாது, செடியாகிய இயேசுவோடு நீங்கள் இணைக்கப்பட உங்கள் இதயத்தில் அவருக்கு இடம் கொடுக்கும் போது, அவரை கனப்படுத்தும் போது அவரும் உங்களோடு, உங்களுக்குள் இருப்பார்.

இன்றைய **Technology world**-ல நிறைய **Disturbance** உங்களுக்கு வரும்போது அதற்கு இடம் கொடுத்தால் உலர்ந்து போன செடி போலாவீர்கள். இயேசுவை நம்பியும் பலன் ஒன்னும் கிடைக்கலையே என்று சொல்லிக் கொண்டிருப்பீர்கள். இயேசு கிறிஸ்துவையும் அவருடைய வார்த்தையும் நம்பி நீங்கள் அதில் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக் கொள்கிறது எதுவோ அது உங்களுக்கு செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனி கொடுக்கும்படி உங்கள் உள்ளத்தையும், வாழ்க்கையையும் ஆண்டவர் சுத்தமாக்குவார். நீங்கள் சிக்கியிருக்கிற தீமைகளிலிருந்து விலகி பாதுகாக்கப்படுவீர்கள். யோவான் 15:1-8. நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவரில் வேர்கொண்டவர்களாக (கொலே 2:6) நடந்து கொண்டால் நிச்சயம் நீங்கள் தேவனுடைய நன்மையான கனிகளை பெற்றுக்கொண்டு, மற்றவர்களுக்கும் நன்மையின் வாய்க்காலாகவும் மாறுவீர்கள்.

## அதினதின் காலத்தில் கனி கொடுப்பீர்கள்

ஒரு வாலிபன் படித்து முடித்த மூன்று வருடத்தில் ஐந்து தொழில்களை தொடங்கி அதை மூடிவிட்டதைக் குறித்த கவலைப்பட்ட அவன் பெற்றோர் அவனை ஒரு துறவியிடம் அழைத்துச் சென்றனர். அந்த துறவி அவனை அங்கிருந்த தோட்டத்திற்கு அழைத்துச் சென்று ஒரு மாங்கொட்டையை அவன் கையில் கொடுத்து பள்ளம் தோன்றி நடச்சொன்னார். பிறகு இரண்டு மணி நேரம் கழித்து இருவரும் தோட்டத்திற்குச் சென்றனர். இந்த மாங்கொட்டை என்ன, இன்னும் வளரவே இல்லை அதைத் தோண்டி எடுத்து வேற இடத்தில் நடு என்று துறவி அந்த வாலிபனிடம் சொன்னார். இரண்டு மணி நேரத்தில் ஒரு செடி எப்படி வளரும் உங்களுக்கு என்ன பைத்தியமா என்று இந்த காலத்துப் பிள்ளைகளைப் போல சொல்ல வந்தும் சொல்லாமல் அவரை மதித்து வேறு இடத்தில் நட்டான். சாயங்காலமானது இரண்டு பேரும் தோட்டத்துக்கு போனார்கள். என்ன இது? இன்னும் பழங்களை தரவில்லையே அதைத் தோண்டி வேற இடத்தில் நடலாமா? என்று துறவி கேட்டதும் வாலிபனுக்கு வந்தது கோபம்! ஒரே நாளில் எப்படி துளிர்விட்டுக் காய்க்கும் என்றான்.

உடனே துறவி, ஒரு தொழிலை, ஒரு காரியத்தை ஆரம்பித்தால் அதை நன்கு வளர்க்க வேண்டும். அதற்காக கொஞ்ச நேரம் (**Time**) எடுக்கும் அதை நன்கு வளர்க்க, கிடைக்கும் வாய்ப்புகளை தேடிக் கண்டுபிடித்து பயன்படுத்தாமல் ஒன்றை மூடிவிட்டு அடுத்ததை தொடங்கலாமா என்றார். வாலிபனும் தன் தவறை உணர்ந்து புது தீர்மானத்தோடு நம்பிக்கையோடு கடந்து சென்றான்.உலகத்தில் பிறந்த, கர்த்தரை நம்பி நிலைத்திருக்கிற ஒவ்வொருவரைக் குறித்தும், உங்களைக் குறித்தும் ஒரு நோக்கத்தை தேவன் வைத்திருக்கிறார். அந்த நோக்கத்தை சிறுவயது படிப்பு, வேலை, திருமணம், ஊழியம் என்ற ஒவ்வொரு நிலையிலும் நிறைவேற்றும் போது அந்தந்த காலத்திற்கு ஏற்ற கனிகளைக் கொடுப்பதாக தேவன் ஏற்றுக்கொள்கிறார். மாற்கு 11:13-ல் இயேசு அத்தி மரத்தில் கனியைத் தேடி வந்து கனியை காணாதபோது ஏமாற்றத்தோடு அதை சபித்து விட்டு போகிறதைப் பார்க்கிறோம்.

லூக்கா 13:6-9 வரையிலுள்ள வசனங்களில் மூன்று வருடமாய் கனியைத் தேடியும் கனியைக் காணாத எஜமான் அதை வெட்டிப்போடச் சொல்லும்போது இது இந்த வருஷமும் இருக்கட்டும் கொத்தி எருப்போடுகிறேன். நிச்சயம் கனி கொடுக்கும் என்று மன்றாடும் தோட்டக்காரனைப் போலத்தான் ஆண்டவர் இயேசுவும் நம் தேவனுடைய மகிமைக்காக, நம்முடைய நன்மைக்காக அந்தந்தக் காலத்தில் கனிகளை, பலன்களை கொடுக்க வேண்டும் என்று பிதாவிடம் பரிந்து பேசி மன்றாடுகிறார். தமது பரிசுத்த ஆவியின் மூலம் ஆவியின் கனியாகிய அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கத்தை நமக்குத் தருகிறார். இதை நாம் அவரிடம் பெற்று உயர்வடையும் சாட்சியாக வாழவே தேவன் அவரில் நிலைத்திருக்கச் சொல்கிறார்.

மாம்சத்தின் கிரியைகளை, கனியற்ற கிரியைகளை இயேசுவின் நாமத்தில் ஜெயித்து, நீங்கள் நிச்சயம் உங்கள் வாழ்வில் கனி கொடுப்பீர்கள். (கலாத்தியர்6:17-26) யோசேப்பு கனிதரும் செடி அவன் நீர் ஊற்றண்டையிலுள்ள கனி தரும் செடி ஆதி 49:22. சொந்த சகோதரர்களால் குழியில் தள்ளப்பட்டு எகிப்தில் அடிமையாக, குற்றவாளியாக இருந்தாலும் இயேசுவைப் போல ஆவியின் கனிகளை அந்தந்த காலத்தில், இடத்தில் கொடுத்துக் கொண்டே இருந்தார். ஒரு அடிமை அரசாளும் அதிபதியாய் உயர்த்தப்பட்டார். யோசேப்பை உயர்த்தி கனி கொடுக்கச் செய்த தேவன் தாமே நீங்கள் கிறிஸ்துவில் நிலைத்திருந்து, உயர்வடைய கனி கொடுக்க உதவி செய்வாராக!.

# ஆமானின் வேண்டாம் கோபம்!

## ஹலோ குட்டீஸ் நல்லாயிருக்கீங்களா,

முந்தைய காலத்தில் பெர்சியானு ஒரு பெரியநாடு இருந்துச்சு (எஸ்தர் 1:1,2) அதுக்கு கீழே இந்தியாவையும் சேர்த்து 127 நாடுகள். அந்த நாட்டை அகாஸ்வேரு என்னும் ஒரு ராஜா ஆட்சி செய்து வந்தார். அவருடைய மனைவி எஸ்தர் பட்டத்து அரசியாக இருந்தார்கள். அகாஸ்வேரு ராஜாவுடைய ஆரண்மனையில் ஆமான் என்ற ஒரு மந்திரியும் இருந்தான். அவன் சொல்வதையெல்லாம் இந்த ராஜா அப்படியே கேட்பார். ஒருநாள் இந்த மந்திரி அரண்மனையிலிருந்து. வெளியே செல்லும்போது அரண்மனை வாசலிலிருந்து எல்லா ஊழியக்காரர்களும் அவனைப் பார்த்து தலை வணங்கினார்கள். ஆனால் அங்கே வாசலைக் காவல்காக்கும் மொர்தெகாய் என்பவர் மட்டும் அவனை வணங்கவில்லை. இது அவனுக்கு கோபத்தையும், எரிச்சலையும் உண்டாக்கியது.

அன்னைக்கு மட்டுமல்ல. ஆமான் என்னும் அந்த மத்திரி அந்த வழியாய். போகும் போதும், வரும்போதும் மொர்தெகாய் அவனை வணங்காமல் இருப்பதைப் பார்த்து யார் இவன்? இவன் மட்டுமல்ல, இவன் குடும்பம். குலக்கோத்திரமே அழியனும் என்று தீர்மானித்தான். மொர்தெகாயைப் பற்றி விசாரித்தான். அவன் ஒரு யூதன். அந்த யூத மக்கள், நம்மை எல்லாம் படைத்த தெய்வத்தை தவிர, அவரால் படைக்கப்பட்ட மனிதர்களை, இயற்கையை, சிலைகளை வணங்க மாட்டார்கள் என்பதையறிந்து ராஜாவுக்குப் பணம் கொடுத்து சில மாதங்கள் கழித்து அவர்களை கொல்வதற்கு அனுமதியும் வாங்கினான். இந்த விஷயம் மொர்தெகாய்க்கு தெரிந்தபோது அதை தன்னுடைய வளர்ப்பு மகளும், ராஜாத்தியுமான எஸ்தருக்கும், அங்கிருந்த அவங்க சொந்த பந்தங்களுக்கும் தெரியபடுத்தினான். அவர்கள் எல்லாரும் உபவாசத்தோடு எங்களைக் காப்பாற்றும் ஆண்டவரே என்று ஆண்டவரை நோக்கி வேண்டினார்கள்.

ஒருநாள் அந்த அகாஸ்வேரு ராஜாவுக்கு, தூக்கம் வரவில்லை. அப்ப அங்கிருந்த சேவர்களை நோக்கி அவங்க ஆட்சியில் நடந்த விபரங்களை வாசிக்கும்படி, ராஜா சேவகர்களை நோக்கிக் கூறினார். அப்பொழுது இரண்டு அதிகாரிகள் சேர்ந்து ராஜாவைக் கொலை செய்ய திட்டமிட்டதை, வாசலைக் காக்கும் மொர்தெகாய் எஸ்தர் ராஜாத்திக்கு தெரியப்படுத்தி ராஜாவை காப்பாற்றினதை வாசித்தார்கள். ராஜா, அந்த மொர்தெகாய்க்கு ஏதாவது பாராட்டு! பணம் கொடுத்தார்களா என்று கேட்டார். அதற்கு அவர்கள் இல்லை என்றார்கள். அப்பொழுது ராஜா யார் அங்கே என்று கேட்க, அந்த நேரம் பார்த்து யூதர்களை கொல்ல திட்டம் போட்ட மந்திரி ஆமான், மொர்தெகாயைக் கொல்ல உயரமான, தூக்குரம் செய்ததை ராஜாவிடம் சொல்லி அதற்கு அனுமதி வாங்க வந்து நின்றிருந்தான். உடனே ஆமான் ராஜாவிடம் வந்தான்.

ராஜா கனம் பண்ண விரும்புகிற மனுஷனுக்கு என்ன செய்யலாம் என்று ராஜா கேட்டார். மந்திரி ஆமானுக்கோ ஒரே பெருமை, என்னையத் தான் ராஜா கனம் பண்ணப்போகிறார் என்ற நினைப்புள அவன் சொன்னான் ராஜவஸ்திரம், ராஜமோதிரம் அணிந்து ராஜா ஏறுகிற குதிரையில் ஏற்றி வளம் வரணும் என்றான். உடனே ராஜா சொன்னான், நீ சொன்னதையெல்லாம் வாசல்காக்கிற அந்த மொர்தெகாய்க்கு செய் என்றவுடன் ஆமானுக்கு முகம் தொங்கிப் போய்விட்டது. ராஜா சொன்னபடியே மொர்தெகாய்க்கு செய்தபின் வெட்கத்தோடு தன் வீட்டுக்குப் போனான். இதற்கப்புறம் எஸ்தர் ராஜாத்தியின் ஜெபத்தினாலும், ராஜாவின் தயவினாலும் எஸ்தரும் மொர்தெகாயும் காப்பாற்றப் பட்டார்கள். பொல்லாத ஆமானையோ அவன் செய்த தூக்குமரத்தில் போட்டார்கள்..

குட்டீஸ், மந்திரி ஆமானின் பெருமை, கோபம் அவனுக்கே அது அழிவைக் கொண்டு வந்தது. யார் மேலேயும் கேபமோ, எரிச்சலோ உங்களுக்கு வேண்டாம். யாராவது உங்களுக்கு எதிரா, ஏதாவது செஞ்சா எஸ்தர், மொர்தெகாய் மாதிரி ஆண்டவரை நோக்கி ஜெபம் பண்ணுங்க. அவங்க செய்ய நினைக்கிற கெடுதலின்படி நடக்காம ஆண்டவர் உங்களைப் பாதுகாப்பார். என்ன குட்டீஸ் சசரியா? **Ok Bye.....**

### ஜெபம்

அன்புள்ள இயேசப்பா எங்களுக்கு எதிரா யாராவது பேசினாலோ, ஏதாவது தீமை செய்ய நினைத்தாலோ அது எதுவும் எங்களை அனுகாதபடி காத்து, அவர்கள் மீது நாங்கள் கோபமோ, எரிச்சலோ படாதபடி பயப்படாம நம்பிக்கையோடு ஜெபம் பண்ண உதவி செயயுங்க. ஆமென்.

### மனப்பாட வசனம்

இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள். கொலோ 3:8

# நெருக்கத்தில் உதவி செய்கிறவர்

### சகோதரி. ஜெயமேரி — கோவை



கடந்த மாதத்தில் பேங்க் லோன் கட்ட வேண்டியிருந்தது. கையில் பணம் இல்லாத நிலை, லோன் கட்டவில்லை என்றால் பிரச்சனையாகும் சூழ்நிலையில் கண்ணீரோடும், வேதனை யோடும் தங்களிடம் ஜெப உதவியை நாடினேன். தாங்கள் எனக்காக ஜெபித்தீர்கள். தேவன் லோன் கட்டுவதற்கான வழியைத் திறந்தார். பணத்தேவையை சந்தித்தார். லோன் கட்ட கிருபை செய்தார். அவரை நோக்கிப் பார்த்த முகங்கள் பிரகாசம் அடைந்தது என்ற வார்த்தையின்படி என்னை தேவன் வெட்கப்பட்டுப் போகவிடவில்லை. ஜெபித்த உங்களுக்கு நன்றி. தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம்.

### சகோதரி. டேனிஸ்ராணி - கேரளா



2023-ஆம் ஆண்டில் என் மகள் குடும்பத்தில் பல பிரச்சனைகள் ஏற்பட்டது. அவர்கள் குடியிருந்த வீட்டை அரசாங்கத்தினர் இடித்து விட்டு அதற்கு பதிலாக வேறு ஒரு இடத்தை தருகிறோம் உடனே நீங்கள் காலி செய்ய வேண்டும் என்றார்கள். சின்ன கடை ஒன்றும் என் மகள் வைத்திருந்தாள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் என்ன செய்வது, எங்கு போவது என்று தவித்த நேரத்தில் தங்கள் ஊழியத்திற்கு தொலைபேசி யில் தொடர்பு கொண்டு ஜெபிக்க கேட்டேன். தேவன் ஊக்கமான ஜெபத்திற்கு நிறைவான பலனைத் தந்தார். அரசாங்கத்திலிருந்து கொடுத்த இடம் முதலைகள் இருக்கும் குளத்திற்கு அருகில் இருந்தும், பலர் அந்த இடம் பாதுகாப்பு இல்லை என்று சொல்லியும் கர்த்தரை நம்பி முதலில் ஒரு சின்ன தகர வீடும், கடையும் ஆரம்பித்தார்கள். தேவகிருபையினால், உங்களுடைய ஜெபத்தினால் அதே இடத்தில் பெரிய வீடும், கடையும் கட்ட தேவன் அநுக்கிரகம் செய்தார். ஜெபித்த உங்களுக்கு நன்றி. சிறுமைப்பட்ட இடத்தில் எங்கள் தலையை நிமிரச் செய்த தேவனுக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்.

### சகோதரி. பரிமளா - திருச்சி

ஆகஸ்ட் மாதத்தில் நான் மிகவும் பெலவீனப்பட்டிருந்தேன். இரண்டு நாட்களாக என் இருதயத்தில் வலிவேதனை, படபடப்பு, மூச்சுதிணறலாக இருந்தது. மருத்துவரிடம் சென்ற போது ஸ்கேன் பண்ணி பார்த்த பின்பு தான் சொல்ல முடியும் என்றார்கள். ஆஞ்சியோ பண்ண வேண்டியிருக்கும் என்றார்கள். நானும், என் குடும்பத்தாரும் வேதனையில் கலங்கினோம். அப்பொழுது தங்களின் ஊழியத்திற்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு என் சரீர சுகத்திற்காகவும், ஸ்கேன் ரிசல்ட் நார்மல் என்று வர வேண்டும் என்பதற்காக ஜெபிக்க கேட்டேன். தேவன் ஜெபத்தைக் கேட்டு மறுநாள் ஸ்கேன் செய்து பார்த்த போது பயப்படத் தேவையில்லை, ஆஞ்சியோ பண்ண வேண்டாம் என்று சொல்லி விட்டார்கள். தற்போது நான் நல்ல சுகத்தோடு இருக்கிறேன். சுகம் தந்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம்.

## இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார். அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார் (1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

### 1) BANK TRANSFER

| | | | |
|---|---|---|---|
| A/C NAME | : JESUS LIVES TRUST | A/C NAME | : L.VINCENT RAJ |
| BRANCH | : KOCHADAI MADURAI | BRANCH | : MADURAI |
| BANK NAME | : UNION BANK OF INDIA | BANK NAME | : AXIS BANK |
| A/C.NO | : 493902010001022 | A/C.NO | : 109010100247030 |
| IFSC CODE | : UBIN0549398 | IFSC CODE | : UTIB0001765 |

### 2) இணையதளம்(WEBSITE)

WWW.JESUSLIVES.IN

### 3) காசோலை(CHEQUE)

JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

### 4) GOOGLE PAY : GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333 ,7598359316

### 5) மணியார்டர்(E.M.O)

இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர், ஏ – காலனி பரவை ,மதுரை – 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

# கல் உப்பு - பொடி உப்பு

## உடலுக்கு எது நல்லது?

இன்று உடல்நலத்தைப் பற்றிப் பேசுகையில், பெரும்பாலும் பலரும் கேட்கும், அல்லது எதிர்கொள்ளும் கேள்விகள், 'எவ்வளவு உப்பு எடுத்துக் கொள்கிறீர்கள்?', 'ஒரு நாளைக்கு எவ்வளவு உப்பு உட்கொள்வது ஆரோக்கியமானது?' ஆகியவைதான். பொதுவாக, ரத்தக்கொதிப்பு, மாரடைப்பு போன்ற வாழ்க்கை முறை நோய்களுடன் உப்பு தொடர்புபடுத்திப் பேசப்படுகிறது.

### கல் உப்பு - பொடி உப்பு வேறுபாடு என்ன?

கல் உப்பு, கடல் நீரிலிருந்து எடுக்கப்பட்டிருந்தாலும், இன்று தூத்துக்குடி போன்ற இடங்களில் இருக்கும் உப்பளங்களில் பெரும்பாலும் ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து எடுக்கப்படும் நீரைப் பயன்படுத்தியே உப்பு தயாரிக்கப்படுகிறது. கல் உப்பைப் பொருத்தவரையில், அது உப்பு நீரை உப்பளங்களில் செலுத்தி ஆவியாக்கி, மீந்திருக்கும் உப்புதான். "சந்தைக்கு அனுப்பப்பட வேண்டிய கல் உப்பில் அயோடின் சேர்க்கப்படுகிறது."

டேபிள் சால்ட் அல்லது பொடி உப்பு தயாரிக்கப்படும் முறை. இதிலும் முதல்படியாக உப்பு நீர் உப்பளங்களில் செலுத்தப்பட்டு, முதலில் கல் உப்பு ஆக்கப்படுகிறது. பின்னர் அது ஆலைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அதிலிருந்து மீண்டும் உப்பு நீரில் கழுவப்பட்டு, மண் தூசி ஆகியவை நீக்கப்படுகின்றன. பின்னர், அது உலர வைக்கப்பட்டு, அரைப்பான்களில் செலுத்தப்பட்டுப் பொடியாக்கப்படுகின்றது. அதன்பின் அதில் இயந்திர முறையில் அயோடின் சேர்க்கப்படுகிறது. "இதில் பொடி உப்பு கட்டிகளாகாமல் மணல்-மணலாக இருக்கச் சிறிது சிலிகேட் என்ற ரசாயனம் சேர்க்கப்படுகிறது."

### உடல் ஆரோக்கியத்திற்கு எது சிறந்தது?

கல் உப்பு, பொடி உப்பு இந்த இருவகை உப்புகளில், எது உடல் ஆரோக்கியத்திற்குச் சிறந்தது இரண்டிலும் அயோடின் அளவுகளில் வேறுபாடுகள் இருந்தாலும், சோடியம் அளவில் எந்த பெரிய மாற்றமும் இல்லை. "உப்பு என்பது பொதுவாக சோடியம் குளோரைட் தான். அது எந்த வடிவில் இருந்தாலும், சோடியம் அளவு ஒன்றுதான்." அதனால், கல் உப்பு, பொடி உப்பு, இருவகை உப்புகளையும் எவ்வளவு குறைவாக உட்கொள்கிறோமோ அந்த அளவுக்கு உடலுக்கு நல்லது.

### உப்பு உடலுக்கு என்ன செய்கிறது?

உப்பு உடலுக்குத் தேவை என்றாலும் கூட, அதிகளவில் உப்பை தொடர்ந்து உட்கொண்டால், அது உடலுக்குக் கேடு. சோடியம் நீரை உறிஞ்சும் தன்மையுடையது. அதனால் அது ரத்த அழுத்தத்தை அதிகரித்து இதயம், மூளை, சிறுநீரகம் ஆகியவற்றைப் பாதிக்கிறது. "அதிகளவில் உப்பை தொடர்ந்து உட்கொண்டால், இருதயத்தின் ரத்த நாளங்கள் சேதமடைந்து மாரடைப்பு ஏற்படலாம். மூளையின் நாளங்கள் சேதமடைந்து பக்கவாதம் வரலாம். சிறுநீரகத்தின் நாளங்கள் சேதமடைந்து சிறுநீரகப் பிரச்சனைகள் ஏற்படுகின்றன."

### அதிக உப்பால் சிறுநீரகத்துக்கு என்ன பிரச்சனை?

பொதுவாக சிறுநீரகங்கள் நமது உடலில் தினமும் 180 லிட்டர் ரத்தத்தைச் சுத்தம் செய்கின்றன. "அதில் 1.5 லிட்டர் தான் சிறுநீராக வெளிவருகிறது. சாதாரணமாகச் சிறுநீரில் புரதம் வெளியேறாது. ஆனால், சிறுநீரக நாளங்கள் சேதமடைந்தால், சிறுநீரில் புரதமும் வெளியேறும்."

### உடலுக்கு எவ்வளவு உப்பு நல்லது?

நாளொன்றுக்கு 5 கிராம் உப்பு தான் உட்கொள்ள வேண்டும். "ஆனால், நமது உணவுப் பழக்கத்தில், ஊறுகாய், அப்பளம் ஆகியவற்றை உண்பதால், நாளொன்றுக்கு 7 கிராம் முதல் 8 கிராம் வரை கூட உப்பை உட்கொள்கிறோம்." மேலும், "உயர் ரத்த அழுத்தம் மற்றும் மன அழுத்தம் ஆகியவை உண்டாகப் பல காரணிகள் உள்ளன. அவற்றில் ஒன்று உப்பு. புறக் காரணிகளை நம்மால் கட்டுப்படுத்த முடியாவிட்டாலும், நாம் உட்கொள்ளும் உப்பின் அளவை நம்மால் கட்டுப்படுத்த முடியும். அதனால் உப்பு உட்கொள்ளும் அளவை நாம் கட்டுப்படுத்துவது அவசியம்." "குழந்தைகளுக்கு ஆரம்பம் முதலே உப்பின் அளவைக் குறைவாகக் கொடுத்துப் பழக்க வேண்டும். அப்போது அவர்களது சுவை உணர்வு அதற்கேற்ப பழகிவிடும். பிறகு அவர்கள் சுவைக்காக அதிக உப்பைத் தேடிச்செல்ல மாட்டார்கள்."

Owned & Published by: Bro.L.VincentRaj, & Editor Bro.L.VincentRaj
Published by Jesus Lives Trust, Yesuvai Thinam Parkiren
54,A.I.B.E.A Nagar,Paravai,Madurai - 625402
Printed by: C.CHELLACHAMY, PRISM PRINTERS, MADURAI


LIVE
புதிய மாத ஆசீர்வாத வாக்குத்தத்த ஜெபம்
நம்பிக்கையின்
இரவு
NIGHT OF HOPE
செப்டம்பர்
30
10.30 மணி
முதல் 12.30
உங்கள் ஜெப விண்ணப்பங்களை அனுப்புங்கள்
உங்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படும்
அனுப்ப வேண்டிய தொலைபேசி எண்
9442800449
EVG L. Vincent Raj
EVG Kala Vincent Raj
சரீர சுகத்திற்காக,
பொருளாதார நெருக்கடி நீங்க, கடன் பிரச்சனைக்காக, திருமண காரியத்திற்காக,
குழந்தை பாக்கியத்திற்காக, தொழில் ஆசீர்வாதத்திற்காக,
உங்களின் எல்லா ஜெப விண்ணப்பங்களுக்காகவும் ஜெபம் ஏறெடுக்கப்படும்.
நமது இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்
அனைத்து சமூக ஊடகங்கள் மற்றும் இணையதளத்திலும் ஒளிபரப்பாகிறது


செம்பட்டியில்
ஆண்டு இறுதி
சிறப்பு உபவாச
ஜெபம்
நவம்பர்
1 - 9
தினமும் காலை 10 மணி முதல்
மதியம் 2 மணி வரை
வாருங்கள் இணைந்து ஜெபிப்போம்
ஜெபியுங்கள், ஆயத்தமாகுங்கள், கலந்து கொள்ளுங்கள்,
தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுச் செல்லுங்கள்.
தேவ செய்தியாளர்கள்
சகோதரர். எல். வின்சென்ட்ராஜ்
சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்
தொடர்புக்கு :
9498000449
9442800449
இடம் :
வானத்தின் வாசல் எழுப்புதல்
ஜெபமையம், செம்பட்டி, திண்டுக்கல்.

Date of Publication on 20th (Every Month )
RNI . TNTAM/2000/00621 Postal Registration No.TN/MA/42/2024 - 2026
WPP Registration No. TN/WPP - 40/SR/2024-2026
Date of Posting 27th (Every Month) Posted at Madurai R.M.S




If undelivered (Please Return To)

**YESUVAI THINAM PARKIREN**

54, A.I.B.E.A Nagar, Paravai,
Madurai - 625402
South India.